1981 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவேண்டும்.

பெரம்பூர் தொகுதியிலுள்ள இறைச்சிக் கூடம்

*வினா எண் 59—திரு. சு. பாலன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பெரம்பூர் தொகுதியில் உள்ள ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி கூடத்தினை நவீன முறையில் சீர்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இல்லை. சென்னை பெரம்பூரில் உள்ள பழைய இறைச்சிக் கூடத்திற்குப் பதிலாக மாதவரத்தில் ஒரு நவீன இறைச்சிக்கூடம் அமைப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதுசம்பந்தமாக தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் நவீன இறைச்சிக் கூடத்தை அமைக்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பெரம்பூரில் உள்ள அந்த ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி கூடத்தில் தினந்தோறும் எவ்வளவு ஆடு, மாடுகள் வெட்டப்படுகின்றன என்பதையும் அதே நேரத்தில் அறுவைக்கு அனுமதிக்கப்படுகின்ற ஆடு மாடுகளுக்கு மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் வெட்டப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த எண்ணிக்கையின் குறிப்பு என்னிடம் இப்போது இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பசுவதைத் தடைச் சட்டம் கொண்டுவரப்போவதாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல மாதங்களுக்கு முன்பு சொன்னார்கள். தமிழ்நாடு பூராவிலும் உள்ள மாடுகள் இறைச்சிக்காக கேரளா போன்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி இறைச்சிக் கூடத்தைச் சீர்படுத்துவது பற்றியதாகும். இதற்கும் கேரள மாநிலத்திற்கு மாடுகள் போவதற்கும் என்ன சம்பந்தம் ? மூலக்கேள்வியை ஒட்டியதல்ல.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, சமீபத்தில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. மாதவரத்தில் இந்த நவீன இறைச்சிக் கூடத்தை ஏற்படுத்தக்கூடாது என்று கேட்டு சென்னையில் உள்ள ஜெயின் சங்கமும், 'அனுவ்ரத்' சங்கமும் அரசுக்கு கோரிக்கை கொடுத்துள்ளதால், அதைக் கைவிடும் யோசனை அரசுக்கு உண்டா அல்லது அதனை அமல் படுத்தப்போகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் கைவிடும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை. பெரம்பூரில் உள்ள இறைச்சிக் கூடம் 13 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளதால், நவீன இறைச்சிக் கூடமாக அதை மாற்ற அந்த இடம் போதாது என்பதால், மாதவரத்தில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் அந்த நவீன இறைச்சிக் கூடத்தை ஏற்படுத்துவது என்று முடிவு செய்து இருக்கிறோம் என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் முதலில் நான் இரண்டு துணைக் கேள்விகள் கேட்டேன். அதற்குப் பதில் அளிக்கவில்லை என்பதால் மீண்டும் கேட்கிறேன். அந்த இறைச்சிக்கூடத்தில் வெட்டப்படுகிற ஆடுகளும், மாடுகளும் மிகவும் நோய்வாய்ப் பட்டவை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அங்கே வெட்டப் படுகிற கால்நடைகள் நல்ல நிலையில் உள்ளவை என்று குறித்து மருத்துவச் சான்றிதழ் பெற்ற பின்னர் வெட்டப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நவீன இறைச்சிக்கூடத்தில் வெட்டப்படுகின்ற மாடுகள் எல்லாம் உபயோகம் அற்ற மாடுகளாகத்தான் இருக்கும். அதாவது, அந்த மாடுகள் எல்லாம் இனி இனவிருத்திக்கு உபயோகமற்றவையாக அல்லது வேலை செய்வதற்கு பயன் படாதவை என்கிற வகையில் உள்ள மாடுகளாகத்தான் இருக்கும். அந்த மாடுகளை வெட்டுவதை நவீன முறையில் வெட்டி, மக்களுக்கு வினியோகிக்கலாம் என்கிற முறையில் தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் கேட்ட கேள்வி—அங்கே வெட்டப்படுகிற ஆடுகளோ, மாடுகளோ வெட்டப்படுவதற்கு முன்பு முறைப்படி மருத்துவ பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டு,

1981 ஜனவரி 27]

சான்றிதழ் பெறப்பெற்ற பின்னர் வெட்டப்படுகிறதா என்பதாகும். அந்தக் கேள்விக்குரிய பதிலைத்தான் பேரவையும் எதிர்பார்க்கிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வெட்டப்படுகிற மாடுகள் முறைப்படி பரிசோதிக்கப்பட்ட பின்னரே வெட்டப்படுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கால்நடை கிளை நிலையங்கள்.

*வினா எண். 60—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் 50 கிளைகளுடன் இயங்கி வருவதை 100 ஆக விஸ்தரிக்க அரசுக்கு திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இல்லை.

[முற்பகல் 10-20]

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவரவர்களே, தமிழகம் முழுவதிலும் இன்று கால்நடை பராமரிப்பு கிளை நிலையங்களில் ஒருசில நிலையங்கள் காலியாக உள்ளன. அவைகள் எவ்வளவு? அந்த நிலையங்களுக்கு, பல கிராமங்களில் இன்றைக்கு ஆய்வாளர்களாகப் பணியாற்றுகிறார்களே, கிரேடு 1, கிரேடு 2 என்று ; அப்படி இருப்பவர்களில் ஒருவரை, ஒரு கிளை நிலையத்திற்கு 30-க்கு குறையாமல் மாடுகள் வந்தால், மாற்றம் செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுவான கேள்வி அல்ல. தஞ்சை மாவட்டத்தில் 50 கிளைகள் இருப்பதை 100 ஆக அதிகரிப்பது பற்றிய கேள்வி இது.

* வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

---

* உடுக்குறியிடாத வினாக்கள் 1-200—விடைகளுடன் இணைப்பாக சேர்க்கப்பெற்றுள்ளது.